# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



## தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரு மனிதன்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Byron Unger; Lazarus

தழுவியவர்: E. Frischbutter; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2017 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

சகரியா என்னப்பட்ட ஒரு வயதான ஆசாரியன் ஒரு நாள் தேவனுடைய ஆலயத்தின் உள்ளே தூபங்காட்டிக்கொண்டிருந்தான்.



வெளியிலே ஜனங்கள் வேண்டுதல் செய்துக் கொண்டிருந்தார்கள் திடீரென, சகரியா பயந்து நின்றான்.



ஒரு தேவதூதன் வந்திருந்தான்.

"பயப்படாதே என்று அவன் சொன்னான்."

தேவன் என்னை
அனுப்பினார்.



"உன் மனைவி ஒரு பிள்ளையை பெறுவாள்.
அவனுக்கு யோவான் என்று பெயரிடு.




அந்த குழந்தை பிறப்பிலே பரிசுத்த
ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கும். அவன்
அனேக ஜனங்களை
தேவனிடத்திற்கு
திருப்புவான்."


"எங்களோடு பேசு, சகரியா,"
வெளியே ஜனங்கள்
திகைத்தார்கள். சகரியா
தேவனுடைய செய்தியை
விசுவாசிக்காததினாலே,
...


... அவன் குழந்தை பிறக்கும் வரை பேச
முடியாமல் இருப்பான் என்று
தேவதூதன் காபிரியேல்
சொன்னதை
அறியாதிருந்தார்கள்.

வீட்டிலே, சகரியா தேவ தூதன் சொன்ன எல்லாவற்றையும் எழுதி காண்பித்தான். அவனுடைய மனைவி எலிசபெத்து, ஆச்சரியப்பட்டாள்.



ஒரு குழந்தைக்காக அவர்கள் எப்போதும் வேண்டுதல் செய்தார்கள். ஆனால் இப்போது நடக்குமா?





உடனே ஒரு குழந்தை வரப்போகிறது என்று எலிசபெத்திற்கு தெரிந்தது. அவள் தேவனை துதித்தாள். ஒரு நாள், எலிசபெத்தின் இனத்தாளாகிய மரியாள் வருகை தந்தாள். மரியாளும் குழுந்தையின் பிறப்பை எதிர்பார்த்திருந்தாள்.



மரியாள் வந்தபோது,
தன்னுடைய வயிற்றிலிருந்த
குழந்தை துள்ளியதாக
உணர்ந்தாள்.
எலிசபெத்
பரிசுத்த
ஆவியினால்
நிரப்பப்பட்டாள்.



மரியாளின் குழந்தை இயேசு
கிறிஸ்துதான் என்று
எலிசபெத்திற்கு
தெரிந்திருந்தது.
இரண்டு
பெண்களும்
சேர்ந்து,
சந்தோஷத்துடன்
தேவனை
துதித்தார்கள்.

தேவன் வாக்குத்தத்தம் பண்ணினபடி
எலிசபெத்திற்கு குழந்தை
பிறந்தது. அவனுடைய
தகப்பன் முறைப்படி
சகரியா என்று
கூப்பிடுங்கள்
என்று
மற்ற



ஆசாரியர்கள் சொன்னார்கள்.

தேவன் கொடுத்த கட்டளையை
சகரியா நினைவு கூர்ந்தான்.
"இல்லை! குலூந்தையின்
பெயர் யோவான்." இதை
எழுதி காண்பித்தபோது,
சகரியாவின் பேச்சு
திரும்பி வந்தது.
பின்பு
அவன்



தேவனை துதித்தான்.

யோவான் வளர்ந்து பெரியவனானபோது,
தேவனுடைய பெரிய
மனிதனாகிய எலியா
போலிருந்தான். யோவான்
ஜனங்களைப்பார்த்து
மேசியா ஜனங்களை ...




... ஆசீர்வதிக்க வழுப்போகிறார்
என்றான். யோவான்.
"மளுந்திரும்புங்கள்!
பாவம் செய்யாதிருங்கள்."
என்று சொன்னதினாலே
லத மத ...

... குருக்கள் யோவானை
வெழ்த்தார்கள்.
அவர்களுடைய
பாவங்களை குறித்து
கேட்க அவர்களுக்கு
விருப்பமில்லை.



மற்றவர்கள் யோவான் ஸ்நானகன் என்று அழைத்தார்கள். ஏனெனில் அவன் பாவத்திலிருந்து மனந்திரும்பிய மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.



ஒரு நாள், இயேசு ஞானஸ்நானம் பெறுவதற்கு யோவானிடத்தில் வந்தார். "நீர் எனக்கு



ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும்", ...

... என்று யோவான் கண்டனம் செய்தான். ஆனால் இயேசுவோ "இப்போது இடங்கொடு," என்றார். யோவான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.



இயேசு
ஞானஸ்நானம்
எடுத்தபின்,
பரிசுத்த
ஆவியானவர்
புறாவைப் போல்
இயேசுவின் மேல்
அமர்ந்ததை
யோவான்
கண்டான்.



உலகத்தின்
பாவங்களை
நிவிர்த்தி
செய்கிற தேவ
ஆட்டுக்குட்டி
என்று யோவான்
இயேசுவை
அழைத்தான்.



யோவான் அனேக ஜனங்களை தேவனிடத்தில் வழிநடத்தினான். ஆனால்



துஷ்ட ராஜாவான ஏரோது, யோவானை சிறைச்சாலையில் அடைத்தான். "உன் சகோதரனின் மனைவியாகிய ஏரோதியாளை உன் மனைவியாக நீ எடுத்துக்கொண்டது பாவம்."

என்று யோவான் சொன்னான்.
அது உண்மை என்று ஏரோது
அறிந்திருந்தான்.



யோவான்
தேவனுடைய
ஊழியக்காரன்
என்றும், நீதியும்,
பரிசுத்தமும் உள்ள
மனிதன் என்று
ஏரோதுக்கு
தெரியும்.



ஆனாலும் பாவம்
செய்வதை அவன்
நிறுத்தவில்லை.
பாவத்தைக்குறித்து
பிரசங்கிப்பதற்கு
சிறைதண்டனை
கிடைத்தாலும்
யோவான் அதை
நிறுத்தவில்லை.

ஏரோது தன்னுடைய பிறந்தநாளன்று ஒரு பெரிய விருந்து பண்ணினான். அப்போது ஏரோதுயாளின் மகள் நடனமாடினாள். இது ஏரோதுக்கு அதிகமாக பிடித்திருந்தது.



"உனக்கு என்ன பிடித்தாலும் கேள், அது ராஜ்ஜியத்தின் பாதிபாகமாக இருந்தாலும் சரி," என்று வாக்குபண்ணினான்.





"நான் என்ன
கேட்பது"
என்று அந்த
பெண்
யோசித்தாள்.
யோவானை
வெழ்த்த
ஏரோதியாள்
தீய எண்ணம்
கொண்டவள்.



என்ன கேட்க
வேண்டும்
என்று
அவள் அந்த
பெண்ணிடம்
சொன்னாள்!
அது
பயங்கரமானது!


அந்தப் பெண் ஏரோதிடம், "யோவானின் தலையை ஒரு தட்டிலே கொடுங்கள்" என்றாள். தான் பண்ணின வாக்குத்தத்தம் தப்பாயிற்றே என்று மனஸ்தாபப்பட்டாலும் ...

... அதை மாற்ற அவனுக்கு மனம் வரவில்லை. "யோவானின் தலையை வெட்டி இங்கே கொண்டு வாருங்கள்" என்று ஏரோது கட்டளையிட்டான். அவனுடைய போர்சேவகர் அதற்கு கீழ்ப்படிந்தார்கள்.



துணிச்சலும், உண்மையுமான தேவனுடைய ஊழியக்காரனான யோவானின் உடலை அவனுடைய நண்பர்கள் மிகுந்த துக்கத்துடன் அடக்கம் செய்தார்கள்.



யோவான் தேவனுக்கு செய்த ஊழியம் முடிவுபெற்றது. இயேசு தங்களை ஆறுதல் படுத்துவார் என்று அவர்கள் யோசித்திருக்கலாம்.



தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரு மனிதன்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மாற்கு 6, லூக்கா 1, 3

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும்.  அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார்.  பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார்.  நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார்.  அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16